திரு. கு. அ. பொம்மன் : நாலாயிரம் ரூபாயில் கிராமப் புறங்களில் வீடு கட்டலாம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மலைப் பிரதேசமாக இருக்கும் மாவட்டங்களில் நாலாயிரம் ரூபாயில் வீடு கட்ட முடியாது. ஆகவே, மலைப் பிரதேசமாக இருக்கும் மாவட்டங்களுக்கு அதிக நிதி ஒதுக்க அமைச்சர் அவர்கள் ஆலோசிப்பார்களா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மலைப் பிரதேசங்களைப் பற்றிச் சரிவர ஆராய்ச்சி செய்யவில்லை. சமீபத்தில் அந்தப் பகுதிகளுக்குப் போக இருக்கிறேன். போய்ப் பார்த்துவிட்டு வந்த பிறகு அதைபற்றி முடிவை அறிவிக்கிறேன்.

ஊராட்சிகளில் மின் கட்டண வசூல்

* 910 வினா.—**திரு. எஸ். கணேசன் :** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சிகளில், மின் எரிச்செலவை Plate Rate முறைப்படி வசூலிப்பதை நிறுத்தி மீட்டர் முறையில் கட்டணம் வசூலிக்க வேண்டும் என்று ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து அண்மையில் கோரிக்கை வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், இது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) ஆம்.

(இ) இது அரசின் பரிசீலனையிலுள்ளது.

ஜீப் பேருந்துகள்

* 911 வினா.—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜீப் பஸ்கள் விடுவதில் அரசு மேற்கொள்ளும் நடைமுறைகள் யாவை ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : சாலைகளின் சீர்கேடான நிலையினால் எந்தெந்த பகுதிகளில் முறையான பேருந்துகள் விட இயலவில்லையோ, அப் பகுதிகளுக்குப் போக்குவரத்து வசதிகள் அளிக்க பொதுமக்கள் கோரிக்கைகள் இருப்பின் அத்தகைய வழித்தடங்களில் ஜீப் பேருந்துகள் விட வட்டார போக்குவரத்து அதிகாரிகளால் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.